www.padippakam.com

# அரசியல் திசைதிருப்பலுக்கு உள்ளாகும் வரலாறு

பார்-மருத ராமனுஜம், பூம் பரசுவினை

இந்திய சமூக விஞ்ஞானக் கழகம்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் திசைதிருப்பலுக்கு உள்ளாகும் வரலாறு

## பாபர் மசூதி — ராம ஜன்மபூமி பிரச்சினை

---

**இந்த வெளியீட்டில் கையொப்பமிட்டிருப்போர்:**

சர்வபள்ளி கோபால், ரோமிலா தாபர், பிபன் சந்திரா, சப்யசாச்சி பட்டாசார்ய, சுவிரா ஜெய்ஸ்வால், ஹர்பன்ஸ் முக்யா, கே.என்.பணிக்கர், ஆர்.சம்பகலட்சுமி, சதீஷ் சபேர்வால், பி.டி.சட்டோபாத்யாய, ஆர்.என்.வர்மா, கே.மீனாட்சி, முஜாபர் ஆலம், தில்பக்சிங், மிருதுளா முகர்ஜி, மாதவன் பாலத், ஆதித்ய முகர்ஜி, எஸ்.எப்.ரத்னாகர், நீலாத்திரி பட்டாசார்ய,. கே.கே.திரிவேதி, யோகேஷ் சர்மா, குனால் சக்ரவர்த்தி, பகவான் ஜோஷ், ராஜன் குருக்கள், ஹிமான்சுராய் ஆகியோர்.

---

இந்திய சமூக விஞ்ஞானக் கழகம்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

முதலில் ஆங்கிலத்தில் வெளியிட்டோர்:
வரலாற்றுக் கல்வி மையம்
ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம்
புது தில்லி - 110 067.

வெளியீடு:

இந்திய சமூக விஞ்ஞானக் கழகம்
12, அசோக் சாலை, சென்னை - 18

டிசம்பர், 1989
முதல் பதிப்பு
இரண்டாம் அச்சு டிசம்பர் 1989

தயாரிப்பு:

சென்னை புக்ஸ்
6, தாயார் சாகிப் 2வது சந்து
சென்னை - 600 002

நன்கொடை ரூ. 1-00

ஒளியச்சு:
வள்ளி லேசர் கிராபிக்ஸ்
சென்னை-18

அச்சு:
ஜுபிடர் பிரிண்டர்ஸ்
சென்னை-2

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

நண்பர்களே,

நாட்டின் ஒற்றுமைக்கு சவால் விடும் ஒரு ஆபத்தான சமூகப் பிரச்சினை குறித்த பிரசுரம் இது. இந்திய சமூக விஞ்ஞானக் கழகத்தின் சார்பில் வெளியிடப்படுகிறது.

நாட்டு மக்களின் வாழ்வையும் வாழ்க்கை நிலைமையையும் பாதிக்கும் பல்வேறு சமூக, பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகள் பற்றிய விவாதங்களையும் கருத்தரங்குகளையும் இந்த அமைப்பு நடத்திக்கொண்டிருக்கிறது. அந்தப் பணியின் தொடர் முயற்சியாகத்தான் இந்தப் பிரசுரம் வெளியிடப்படுகிறது.

'பாபர் மசூதி — ராம ஜன்மபூமி' பிரச்சினை நாட்டு மக்களிடையே அச்சத்தையும் கவலையையும் அதிகப்படுத்தும் ஒரு நிகழ்வாக இருந்து கொண்டிருக்கிறது.

மக்களின் மத உணர்வுகள் தவறான வழியில் செயல்பட ஊக்குவிக்கப் படுகிறது. அரசியலையும் மதத்தையும் ஒன்றாகச் சேர்த்து குழப்பிக்கொண்டிருக்கிற சில சமூக சக்திகள், இந்தப் பிரச்சினையைத் தங்களுடைய குறுகிய நலன்களுக்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றன. இந்த முயற்சியில் வரலாற்றையே திரித்து வாதிடும் போக்குகளும் வெளிப்படுகின்றன. ஆகவே இந்தப் பிரச்சினையின் சரியான சமூக வரலாற்றுப் பின்னணி எது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருப்பதாக நாங்கள் உணர்கிறோம். எந்தவிதமான விருப்பு வெறுப்புகளுக்கும் ஆளாகாமல் வரலாற்றை ஆய்வு செய்யும் திறன்பெற்ற சில வரலாற்றுப் பேராசிரியர்கள் அத்தகைய ஒரு பின்னணியைப் பற்றி வெளியிட்ட அறிக்கை ஒன்றை நாங்கள் வெளியிடுகிறோம். அதோடு திருமதி மைதிலி சிவராமன் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றையும் இணைத்து வெளியிடுகிறோம். இந்த அமைப்பு எந்த மத அடிப்படைவாதத்தையும் ஏற்றுக்கொள்கிற ஒன்றல்ல. இந்த நாட்டில் மதச்சார்பற்ற சக்திகள் தங்களுடைய பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு துணையாகச் செயல்படும் அமைப்புதான் இது.

இவற்றிலிருந்து இந்தப் பிரச்சினை குறித்த ஒரு தெளிவான பார்வை எல்லோருக்கும் கிடைக்கும் என நம்புகிறோம். இந்த முயற்சிக்கு நீங்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய சமூக விஞ்ஞானக் கழகம்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் திசைதிருப்பலுக்குள்ளாகும் வரலாறு

## பாபர் மசூதி — ராம ஜன்மபூமி பிரச்சினை

பாபர் மசூதி — ராம ஜன்மபூமி சர்ச்சையின் பின்னணியில் இருப்பது நம்பிக்கை, அதிகாரம், அரசியல் ஆகிய பிரச்சினைகள்தான். ஒவ்வொருவருக்கும், அவருக்கே உள்ள நம்பிக்கையையும், கருத்துகளையும் வைத்துக் கொள்ளும் உரிமை உண்டு. ஆனால் நம்பிக்கைகள் வரலாற்றின் ஆதாரத்தைக் கைக்கொள்ள விரும்பும்போது, நம்பிக்கையையும் வரலாற்றையும் வரலாற்றாளர் வரையறுக்க வேண்டியதாகிறது. வகுப்புவாத சக்திகள், தமது வகுப்புவாத அரசியல் நோக்கங்களுக்கு ''வரலாற்றுச் சான்றை''ப் பயன்படுத்தும்போது, அந்தக் கணத்தில் வரலாற்றாளர் தலையிட வேண்டியுள்ளது.

இங்கே, 'வரலாற்றுச் சான்று', ராம ஜன்மபூமி - பாபர் மசூதி பிரச்சினைக்குத் தீர்வாகவோ, விவாதமாகவோ முன்வைக்கப்படவில்லை. ஏனெனில் இந்தச் சர்ச்சை வரலாற்றுப் பதிவுகளைப் பற்றிய விஷயம் மட்டுமே அல்ல. இந்திய அரசியல் பரவலாக வகுப்புவாதமயமாகி உள்ளதிலிருந்து இந்த மோதல் உருவாகிறது. அப்படி இருந்தாலும், சமூகத்தை வகுப்புவாதமயமாக்க எந்த அளவுக்கு 'வரலாற்றுச் சான்று' இழுக்கப்பட்டுள்ளது என்பதைப் பரிசீலனை செய்வது அவசியம்.

### I

அயோத்தி, ராமன் பிறந்த இடம்தானா? இந்தக் கேள்வி இது தொடர்பான வேறொன்றையும் எழுப்புகிறது. இன்றைய அயோத்தி ராமாயணத்தில் குறிப்பிடப்படும் அயோத்திதானா?

ராமனுடைய கதை நிகழ்ச்சிகள் ஆரம்பத்தில் 'ராம கதா'வில் சொல்லப்பட்டன. இந்த 'ராம கதா' இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. இந்த ராமனின் கதை நிகழ்ச்சிகளை பின்னாளில் 'ராமாயணம்' என்ற பெயரில் மிக நீண்ட இதிகாசமாக வால்மீகி எழுதினார். இது முழுவதும் கவிதைகளாக, செய்யுள்களாக இருந்தது. இதனாலேயே இதில் கூறப்பட்ட பாத்திரங்கள், இடங்கள் உள்பட பெரும்பாலானவை கற்பனையாக இருக்கக்கூடும். எனவே இதில் வரக்கூடிய பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் அல்லது இடங்களை வேறு ஆதாரச்சான்று இல்லாமல் வரலாற்றாளர் ஒப்புக் கொள்ள முடியாது. இச்சான்றும் வரலாற்றாளர்களால் அதிக நம்பிக்கைக் குரியன என்று கருதப்படும் ஆதாரங்களில் இருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். பெரும்பாலும் வரலாற்றுச் சான்றுகள், பரவலான நம்பிக்கைகளுடன் முரண்படுகின்றன.

வால்மீகி ராமாயணத்தின்படி, அயோத்தி மன்னன் ராமன் 'திரேதாயுகத்தில்' பிறந்தான். திரேதாயுகம் என்பது கலியுகத்திற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்புள்ள காலம். கலியுகம் கி.மு. 3102-ம் ஆண்டில் ஆரம்பமானது என்று பொதுவாகக் கருதப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

i) இன்றைய அயோத்தியைச் சுற்றியுள்ள பகுதியில் இவ்வளவு பண்டைய காலத்தில் மனிதர்கள் வாழ்ந்ததற்கான அகழ்வாய்வுச் சான்றுகள் எதுவும் இல்லை. இந்தப் பகுதியில் குடியேற்றங்கள் நிகழ்ந்த ஆரம்ப காலம் கி.மு. 8 ஆம் நூற்றாண்டாக இருப்பதுதான் சாத்தியம். இந்தப் பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கிடைத்த சான்றுகள் மிகச் சாதாரண பொருளியல் வாழ்க்கையைச் சுட்டுகின்றன; இது வால்மீகி ராமாயணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளதை விட மிகவும் புராதனமானது.

ii) நகர்ப்புறச் சூழலில் அமைந்துள்ள பெருமளவிலான கட்டடங்கள், அரண்மனைகளைப் பற்றி ராமாயணத்தில் பரவலாகப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் இத்தகைய நகர்ப்புறக் கட்டட வளாகங்கள் பற்றிய விவரிப்புகளை, கி.மு. 8 ஆம் நூற்றாண்டு குறித்த அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் உறுதி செய்யவில்லை.

iii) அயோத்தியின் அமைவிடம் குறித்தும் ஒரு சர்ச்சை உண்டு. கோசல நாட்டின் பெரிய நகரங்களாக ஷ்ரவஸ்தி, சாகேதம் ஆகியவற்றைத்தான் ஆரம்பகால பௌத்த நூல்கள் குறிப்பிடுகின்றனவே தவிர அயோத்தியைக் குறிப்பிடவில்லை. கோசலத்தின் தலைநகர் சாகேதம் என ஜைன நூல்களும் குறிப்பிடுகின்றன. அயோத்தி என்ற ஒன்றைப் பற்றி மிகக் குறைந்த குறிப்புகளே காணப்படுகின்றன. அந்த அயோத்தியும் கங்கைநதிக் கரையில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய அயோத்தியின் அமைவிடமான சரயு நதிப் பகுதியில் அது அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்படவில்லை.

iv) குப்த அரசன் ஒருவன் சாகேதம் என்ற நகருக்கு அயோத்தி என்று பெயர் மாற்றினான். ஸ்கந்த குப்தன் என்ற அரசன், கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தன்னுடைய இருப்பிடத்தை சாகேதம் நகருக்கு மாற்றிக் கொண்டு அதை அயோத்தி என்று அழைத்தான். இவன் தனக்கு விக்கிரமாதித்தன் என்று பெயர் சூட்டிக்கொண்டு அதனை, தான் வெளியிட்ட தங்க நாணயங்களிலும் பொறித்தான். இவ்வாறு, இதிகாசக் கவிதையின் கற்பனையாக இருந்திருந்திருக்கக் கூடிய அயோத்தி, பிற்காலத்தில் சாகேதம் நகரோடு இனங்கண்டுகொள்ளப்பட்டது. இதனால் குப்த அரசன், ராமனின் பக்தன் என்று கூறுவதாகக் கருதிவிட வேண்டிய அவசியம் இல்லை. சாகேதத்தை அயோத்தி என்று பெயர் மாற்றுவதன் மூலம், ராமன் பிறந்த வமிசமாகச் சொல்லப்படும் சூரிய வமிசத்து அரச பரம்பரையைத் தன்னுடையதாக்குவதன் வாயிலாகத் தனக்குப் பெருமை சேர்த்துக் கொள்ள முயன்றான்.

v) ஏழாவது நூற்றாண்டுக்குப் பிறகு வந்த நூல்களில் அயோத்தி பற்றி வலுவான குறிப்புகள் உள்ளன. கி.பி. முதல் ஆயிரமாண்டு மற்றும் இரண்டாம் ஆயிரமாண்டின் முற்பகுதி காலத்திய புராணங்கள், ராமாயணத்தைப் பின்பற்றி அயோத்தியை கோசல நாட்டின் தலைநகரம் என்றே குறிப்பிடுகின்றன. (விஷ்ணுதர்மோத்தர மகாபுராணம் 1.240.2)

iv) ஒரு வகையில், அயோத்தியின் உள்ளூர் பாரம்பரியக் கதை, அயோத்தியின் ஆரம்பம் பற்றிய தெளிவற்ற வரலாற்றினை அங்கீகரிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

திரேதாயுகத்திற்குப் பிறகு அயோத்தி மறைந்துவிட்டது; அதனை மீண்டும் விக்கிரமாதித்தன் கண்டுபிடித்தான் என்பதுதான் அந்தக் கதை. மறைந்து போன அயோத்தியைத் தேடி அலைந்த விக்கிரமாதித்தன், தீர்த்த அரசன் எனப்பட்ட 'பிரயாக' என்பவரைச் சந்தித்தான்; அயோத்தியைப் பற்றி அறிந்திருந்த அவர், அவனுக்கு அதைக் காண்பித்தார். அந்த இடத்தைக் குறித்து வைத்தான்; ஆனால் பின்னர் இதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. பின் அவன் ஒரு சந்நியாசியைச் சந்தித்தான்; அவர் அவனிடம் ஒரு பசுவையும் கன்றையும் மேயவிடுமாறு கூறினார்; அந்தக் கன்று ஜன்மபூமிக்கு வரும்போது, அதனுடைய மடியிலிருந்து பால் சுரக்கும் என்று கூறினார். சந்நியாசியின் யோசனையை அரசன் கடைபிடித்தான். ஒரு குறிப்பிட்ட இடத்தில், கன்றின் மடியிலிருந்து பால் சுரக்கத் தொடங்கியபோது, பண்டைய அயோத்தியின் அமைவிடம் அதுதான் என்ற முடிவுக்கு அரசன் வந்தான் என்கிறது அந்தக் கதை.

பண்டைய புனிதமான மரபுவழிக் கதை என்று போற்றப்படுகிற, அயோத்தியை 'மீண்டும் கண்டுபிடித்த' கதையானது, ஒரு குறிப்பிட்ட மதரீதியான புனிதத் தன்மையை, அப்படியில்லாத ஒரு நகருக்கு ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். இந்தக் கட்டுக்கதைகளிலும்கூட, அந்த அமைவிடங்கள் ஒன்றையொன்றொத்தவை என்பதற்கான வழிமுறை உறுதியற்றதாகவும் தன்னிச்சையானதாகவும் தோன்றுகின்றது.

இன்றைய அயோத்தி, ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னர் சாகேதம் என்று வழங்கப்பட்டிருக்குமாயின் வால்மீகியின் ராமாயணத்தில் வரும் அயோத்தி கற்பனையானதாகும். அப்படியானால் இன்றைய அயோத்தியில் ராம ஜன்மபூமியை அடையாளங்காண்பதென்பது நம்பிக்கையின்பாற்பட்டதே தவிர வரலாற்றுச் சான்றின்பாற்பட்டதல்ல.

ராம ஜன்மபூமியின் உத்தேசமான அமைவிடம் பற்றிய வரலாற்றுப்பூர்வமான உறுதியற்றதன்மையும் புத்தருடைய பிறப்பிடத்தின் வரலாற்று உறுதித்தன்மையும் ஒன்றோடொன்று முரண்படுகின்றன. புத்தர் மறைந்து இரு நூற்றாண்டுகளுக்குப் பின், லும்பினி என்ற கிராமமானது புத்தர் பிறந்த இடமாகும் என்று, அவரது நினைவாக அங்கு கல்வெட்டு ஒன்றை மௌரிய அசோகர் நிறுவினார். இந்த விஷயத்திலும், அந்தக் கிராமத்திற்கு அருகில் புத்தர் பிறந்தார் என்று மட்டும்தான் அந்தக் கல்வெட்டு குறிப்பிடுகிறது; துல்லியமாக இந்த இடம் என்று கல்வெட்டு குறிப்பிட முயற்சிக்கக் கூட இல்லை.

II

ராம வழிபாட்டுக்கு மட்டுமல்லாமல், பல்வேறு மதங்களுக்கும் புனிதத் தலமாக அயோத்தி இருந்துவந்திருக்கிறது.

i) கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரையான கல்வெட்டுகள், மற்றும் இதற்குப் பிந்தைய காலத்தியவைகூட அயோத்தி மக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன; ஆனால் அந்த இடத்தை ராமருடைய வழிபாட்டுடன் இணைத்து அவற்றில் ஒன்றுகூடக் குறிப்பிடவில்லை. (எப்



படிப்பகம்

www.padippakam.com

பிரோஃபிகா இண்டிகா 10. பக்.72; 15.பக். 143; 1.பக். 14)

ii) பிக்குகளின் மடங்கள், ஸ்தூபிகள் மற்றும் ஒருசில பௌத்தமல்லாத கட்டடங்களும் அமைந்திருந்த அந்த இடம், பௌத்தத்தின் ஒரு முக்கிய தலமாகும் என்று அயோத்தியைப் பற்றி யுவாங் சுவாங் எழுதுகிறார். புத்தர் சிறிது காலம் தங்கியிருந்ததாக நம்பப்படும் அயோத்தி, பௌத்தர்களுக்கு ஒரு புனித தலமாகும்.

iii) ஜைன யாத்ரீகஸ்தலமாகவும் அயோத்தி இருந்திருக்கிறது. ஜைனர்களைப் பொருத்தவரை, அது முதலாம் மற்றும் நான்காம் ஜைன தீர்த்தங்கரர்கள் பிறந்த இடமாகும். கி.மு. 4-ம் - 3-ம் நூற்றாண்டைய, அகழ்வாய்வில் கண்டுபிடித்த சாம்பல் நிறமான, மண்சுதையிலான ஜைன உருவமானது, இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பழைய ஜைன உருவங்களில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

iv) கி.பி.பதினொன்றாம் நூற்றாண்டைய நூல்கள் அயோத்தியில் கோபதரு தீர்த்தம் என்ற இடத்தைக் குறிப்பிடுகின்றனவே தவிர, ராமனுடைய ஜன்மபூமியுடனான தொடர்புகள் எதையும் பற்றிக் குறிப்பிடவில்லை.

v) பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்துதான் ராம வழிபாடானது பரவியிருப்பதாகத் தெரிகிறது. ராமநந்தி சமயப் பிரிவின் தோற்றத்தோடும் ஹிந்தியில் ராமன் கதை எழுதப்பட்டதோடும் ராம வழிபாடு அடித்தளத்தைப் பெற்றது.

15-16-ம் நூற்றாண்டுகளில்கூட ராமநந்திகள் அயோத்தியில் குறிப்பிடத்தக்க அளவில் குடியேறியிருக்கவில்லை. ராமர் வழிபாட்டைவிட சைவ சமயமே மிக முக்கியமானதாகயிருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்துதான் ராமநந்தி சாதுக்கள் இங்கு பெருமளவில் குடியேறியிருப்பதாக நமக்குத் தெரியவருகிறது. அதற்குப் பின் வந்த நூற்றாண்டுகளில்தான் அவர்களது கோயில்களில் பலவற்றை அயோத்தியில் அவர்கள் கட்டினார்கள்.

## III

முன்னர் ஒரு கோயில் அமைந்திருந்த நிலத்தில்தான் பாபர் மசூதி கட்டப்பட்டிருக்கிறது என்கிற கருதுகோளுக்கு ஆதரவான வரலாற்றுச் சான்று எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

i) பாபருக்காக ஒரு மசூதி நிறுவப்பட்டது என்பதைக் குறிக்க, மசூதியினுடைய கதவின் இரு பக்கங்களிலும் பாரசீக மொழியில் பொறிக்கப்பட்டுள்ளதில் இருக்கும் வரிகளைத் தவிர, வேறெந்த மூலச்சான்றும் அங்கு கிடையாது. பாபர் நாமாவை முதன் முதலில் மொழிபெயர்த்த திருமதி பெவரிட்ஜ், மேற்சொன்ன பாரசீக மொழியிலான வரிகளையும், அவற்றின் மொழிபெயர்ப்பையும் அந்த நூலில் பின்னிணைப்பாகக் கொடுத்துள்ளார். அதன் முக்கியப் பகுதி பின்வருமாறு: ''விண்ணுலகத்தை எட்டும் வகையில், நீதியை நிலைநாட்டிய பேரரசர் பாபரின் ஆணைப்படி, நல்லிதயம்



படிப்பகம்

www.padippakam.com

படைத்த மீர் பாகி என்பவர், தேவ தூதர்கள் வந்திறங்கும் இடமாக இதைக் கட்டினார். பவத் (புவத்) கெயிர் பாகி (இந்நற்செயல் நீடித்து நிலைக்கட்டும்)'' (பாபர் நாமா, எ.எஸ்.ப். பெவரிட்ஜ் மொழிபெயர்ப்பு 1922, II, PP. LXXVIII)

பாபர் அவையின் அறிஞரான மீர் பாகி என்பவர் இந்த மசூதியைக் கட்டியதாக மட்டுமே இந்தக் கல்வெட்டு கூறுகிறது. ஒரு கோயில் இருந்த இடத்தில் இந்த மசூதி கட்டப்பட்டதாக இதில் வரும் எந்த வரியும் கூறவில்லை. அயோத்தியிலுள்ள எந்தக் கோவிலையும் இடித்ததாக பாபர் நாமாவில் எந்தக் குறிப்பும் இல்லை.

ii) 'அயின்-இ-அக்பரி' யானது, ''திரேதாயுகத்தில், ஆன்மீக ஆற்றலும் அரச பதவியும் கொண்ட இராமச்சந்திரனின் இருப்பிடமாக'' அயோத்தி இருந்தது என்று குறிப்பிடுகிறது. ஆனால், ராமன் கோயில் இருந்த இடத்தில், இந்நூலாசிரியரின் பாட்டனாரை ஆதரித்தவரால் மசூதி அமைக்கப்பட்டது பற்றி குறிப்பெதுவும் இதில் காணப்படவில்லை.

iii) அக்பரின் சமகாலத்தவரும் ராம பக்தரும் அயோத்தியில் குடியிருந்தவருமான துளசிதாஸ், மிலேச்சர்களின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் கண்டு வருத்தமடைவதாகக் கூறினாரேயன்றி ராம ஜன்மபூமியின் அமைவிடத்திலிருந்த இந்துக் கோயிலை இடித்ததாகக் கூறவில்லை.

iv) இந்தக் கதை 19-ம் நூற்றாண்டில்தான் பரவியது. அச்சமயம்தான் இது, அரசாங்கப் பதிவேடுகளிலும் இடம்பெறுகிறது. இப்பதிவேடுகள் தான், பின்னால் சரியான வரலாற்றுச் சான்றாக மற்றவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன.

இப்பகுதி பற்றிய பிரிட்டிஷ் ஆட்சிகால பதிவேடுகளில், கோயில் இடிக்கப்பட்டதாகக் கூறப்படும் கதை, வரலாற்றுப்பூர்வமான உண்மைகளை ஆராயாமல் அப்படியே கூறப்பட்டுள்ளது. (ஆதாரம் பி.கார்நேகி - ஹிஸ்டாரிகல் ஸ்கெட்ச் ஆப் பைஸாபாத் தாசில், பைஸாபாத் ஜில்லா, லக்னோ, 1870; ஹெச்.ஆர்.நெவில், பைஸாபாத் மாவட்ட கெஜட், அலகாபாத், 1905)

மேலே கூறப்பட்டுள்ள, மொழிபெயர்க்கப்பட்ட பகுதிக்கு எழுதியுள்ள ஓர் அடிக்குறிப்பில், இக்கதையில் தனக்குள்ள நம்பிக்கையை திருமதி பெவரிட்ஜ் உறுதிப்படுத்தியுள்ளார்.

முஸ்லீமான பாபர், ''பழைய இந்துக் கோயிலின் மேன்மையினாலும், புனிதத்தினாலும் ஈர்க்கப்பட்டு,'' ''குறைந்தபட்சம் ஒரு பகுதி'' கோயிலையாவது இடித்துவிட்டுத்தான் மசூதியை எழுப்பியிருப்பார் என்று திருமதி பெவரிட்ஜ் கூறுகிறார். அவருடைய வாதம் மிகவும் சாதாரணமானது: ''அதாவது பாபர், முகமது நபியைப் பின்பற்றும் ஒரு முஸ்லீம். ஆகையால் அவர் வேறு எந்த மதத்தையும் சகிக்கும் தன்மை இல்லாதவர். ஆகவே, கோயிலுக்குப் பதிலாக மசூதியைக் கட்டுவதை ஒரு கடமையாகவும் பயனுள்ளதாகவும் கருதியிருப்பார்'' என்பதே அந்த வாதம். இது மிகவும் கேள்விக்குரிய ஓர் அனுமானமாகும்; ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவரின் தன்மையும், நடத்தையும் இப்படித்தான் இருக்கும் எனப் பொதுமைப்



படிப்பகம்

www.padippakam.com

படுத்தும் முறையிலிருந்தே இந்த அனுமானம் உண்டாகியிருக்கிறது. ஒரு கோயில் இருந்த இடத்தில்தான் மசூதி கட்டப்பட்டது என்ற தனது கூற்றுக்கு எந்த வரலாற்றுச் சான்றையும் திருமதி பெவரிட்ஜ் கொடுக்கவில்லை. உண்மையில் பிற மதங்களின் வழிபடும் இடங்களைக் குறித்த பாபர் அரசின் கொள்கைகள், திருமதி பெவரிட்ஜின் ஊகத்தை சிறிதும் நியாயப்படுத்தும் வகையில் இல்லை.

இந்தியாவை, ஒன்றுக்கொன்று பகையுணர்வுள்ள பல சமயப் பிரிவினரைக் கொண்ட ஒரு நாடாகக் கருதிய பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு, இத்தகைய கதைகள் சுயச்சான்றுகள் கொண்டவையாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் வரலாற்றாளரோ, ஒவ்வொரு வரலாற்றுக் கூற்றின் நம்பகத் தன்மையையும் அதன் ஆதார மூலங்களையும் கூர்ந்து ஆராய வேண்டியிருக்கிறது.

ஒரு கோயிலை இடித்து அவ்விடத்தில் பாபர் மசூதி, கட்டப்பட்டதற்குச் சான்று இல்லை என்பது ஒருபுறமிருக்க, அம்மசூதி, மத்திய கால வரலாற்று மூலங்களின்படிஇஸ்லாமிய மதரீதியிலோஅல்லது பண்பாட்டு ரீதியிலோ பெரிய மகத்துவம் கொண்ட ஒன்றாக முஸ்லீம்களால் கருதப்படவில்லை.

இஸ்லாமிய மன்னர்கள் பாகுபாடின்றி, இயல்பாகவே எப்போதும் இந்துக்களின் புண்ணியத் தலங்களுக்கு எதிராக நடந்துகொண்டனர் என்னும் ஊகம் வரலாற்றுச் சான்றுபூர்வமானதல்ல.

1. முஸ்லீம் நவாபுகளின் ஆதரவு, அயோத்தி ஒரு புண்ணியத்தலமாக வளர்வதற்கு மிகவும் முக்கியமாக இருந்தது. காயஸ்தர்களது ஒத்துழைப்பைச் சார்ந்து நவாப் அரசு செயல்பட்டது என்றும் அவர்களது ராணுவத்தில் சைவ நாகர்களின் செல்வாக்கு அதிகமிருந்தது என்றும் சமீபகால ஆராய்ச்சிகளிலிருந்து தெரிகிறது. கோயில்களுக்கு ஆதரவு கொடுப்பதும், தானங்கள் அளிப்பதும் நவாப் ஆட்சியதிகாரத்தைச் செலுத்தும் முறையோடு ஒன்றிணைந்த பகுதியாக இருந்தன. நவாப் சப்தர்ஜங்கின் திவான், அயோத்தியில் பல கோயில்களைக் கட்டியும், பழுதுபார்த்து சீர்செய்தும் உள்ளார். அயோத்தியில் ஹனுமான் மலையில் கோயில் கட்ட சப்தர்ஜங், ''நிர்வாண ஆக்கார''வுக்கு இடம் வழங்கினார். ஹனுமான் மலையில் கோட்டை போலமைந்த கோயிலைக் கட்ட அசஃப் உத்தௌலாவின் திவான் உதவி செய்துள்ளார். இந்து சந்நியாசிகளால் நடத்தப்பட்ட மதச்சடங்குகளுக்கு, நவாபின் சபையிலுள்ள முஸ்லீம் அதிகாரிகள் பல தானங்கள் வழங்கியுள்ள செய்திகளை பண்டாக்களின் பதிவேடுகளில் காணலாம்.

2. இந்து - முஸ்லீம் சச்சரவுகளின் போது முஸ்லீம் அரசர்கள் முஸ்லீம்களையே எப்போதும் ஆதரிக்கவில்லை. ஹனுமான் கோயிலைப் பற்றி அயோத்தியில் 1855ல், சன்னி முஸ்லீம்களுக்கும் நாக சாதுக்களுக்குமிடையே ஒரு சச்சரவு ஏற்பட்டபோது, உறுதியான, இறுதியான நடவடிக்கை ஒன்றை வாஜித் அலி ஷா எடுத்தார். மாவட்ட அதிகாரி ஆகா அலி கான், முக்கியமான ஹிந்து நில உரிமையாளர் ராஜா மான்சிங், கம்பெனியாரின் சேனைக்குப் பொறுப்பாளராயிருந்த இங்கிலாந்து அதிகாரிகள் ஆகியோர



படிப்பகம்

www.padippakam.com

டங்கிய முத்தரப்பு விசாரணைக் குழு ஒன்றை அமைத்தார். பேச்சு வார்த்தை மூலமான உடன்பாடு, வகுப்புவாதம் உருவாவதைத் தடுக்கத் தவறியபோது, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர, முஸ்லீம் தலைவர்களின் ஆதரவை வாஜித் அலி ஷா திரட்டினார்; முஸ்லீம் வகுப்புவாத சக்திகளின் தலைவரான மௌலவி அமீர் அலியின் சொத்துகளைப் பறிமுதல் செய்தார். அமீர் அலியினால் வழிநடத்தப்பட்ட சன்னி முஸ்லீம் பிரிவினரை ஒடுக்க இறுதியாக ராணுவத்தை வரவழைத்தார்; இதில் முன்னூறிலிருந்து நானூறு பேர்வரைக் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே சச்சரவுகளே இல்லை என்பதல்ல; எந்த ஒரு மதத்திலும் ஒரே வகுப்பினராகவும் இல்லை. ஒரு வகுப்பினரிடையே உள்ள பிரிவுகளுக்கும் குழுக்களுக்கும் இடையே பகைமை இருந்தபோதே, வெவ்வேறு வகுப்பினரிடையே ஒற்றுமையும் இருந்தது.

ஹிந்து மற்றும் முஸ்லீம் வகுப்புவாத சக்திகளின் கோரிக்கைகளுக்கு வரலாற்று அங்கீகாரம் கிடையாது என்பதை மேற்கண்ட வரலாற்றுச் சான்றின் ஆய்வு தெரிவிக்கிறது. ஒரு புனித தலம் என்ற வகையில் அயோத்தியின் தனித்தன்மை, பல நூற்றாண்டுகளாக மாறிக்கொண்டே வந்திருக்கிறது. பல மதங்களின் வரலாற்றுடனும் அது பிணைக்கப்பட்டுள்ளது. பல வகுப்பினர்கள், அவரவர்க்குச் சொந்தமான புனிதத் தன்மையை அதற்கு வழங்கியுள்ளனர். அந்த நகரம் தமக்கு மட்டுமேயான புனிதத் தலம் என்று எந்தவொரு வகுப்பும் உரிமைகோர முடியாது.

எந்த ஒரு சமுதாயத்திலும் வரலாற்றைத் தன்வயமாக ஆக்கிக் கொள்வது ஒரு தொடர் நிகழ்வாகும். ஆனால் நம்முடையதைப் போன்ற பல மதங்கள் உள்ள ஒரு சமுதாயத்தில், வகுப்புவாத பொதுமைக் காரணிகளின் அடிப்படையில் மட்டுமேயான தன்வயமாக்குதல்கள், முடிவில்லாத வகுப்புக் கலவரங்களை உருவாக்கும். பழையனவற்றை அழிக்கும் முயற்சிகள் விபரீதமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

எனவே, இதற்கு விரைவாக ஓர் அரசியல் தீர்வு காண்பதே பொருத்தமானதாகும். ''ராம ஜன்மபூமி - பாபர் மசூதி'' பகுதிகள் வரையறுக்கப்பட்டு தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்படவேண்டும்.

○

படிப்பகம்

www.padippakam.com

# ராம ஜன்மபூமி - பாபர் மசூதி பிரச்சினையின் தன்மை என்ன?

('எக்கனாமிக்கல் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி'என்னும் இதழில் ஏ.ஜி.நூரானி எழுதிய கட்டுரையின் சுருக்கமாகும்.)

இந்திய மக்களின் ஏராளமான நிஜவாழ்க்கை பிரச்சினைகள் தட்டிக் கேட்பாரின்றி வளர்ந்துகொண்டிருக்கையில், இல்லாத பிரச்சினைகளை உருவாக்கி குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இவற்றில் முதன்மையாக ராம ஜன்மபூமியைப் பற்றி ஏராளமான செய்திகள் வெளிவந்துள்ளன. உ.பி. மாநிலத்தில் உள்ள அயோத்தியில்தான் ராமர் பிறந்தார் என்பதற்கு எந்தச் சான்றும் இல்லையென பல வரலாற்றுப் பேராசிரியர்களின் கூட்டு அறிக்கையும் வெளிவந்துள்ளது. (இதன் தமிழாக்கம்தான் முந்தைய கட்டுரை.)

ஆனால், சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் இப்பிரச்சினை தோன்றிய பின்னணி, குறிப்பான சில சம்பவங்கள், அன்றைய நிர்வாகத்தின் பார்வை, பாரபட்சமான நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவை பற்றி அதிகமான விவரங்கள் வெளிவராத காரணத்தினால், மக்கள் ராம ஜன்மபூமி - பாபர் மசூதி பிரச்சினை பற்றி மேலும் தெளிவு பெற சில தகவல்கள் இங்கு அளிக்கப்படுகின்றன.

கடந்த மூன்றாண்டுகளாக, பிரபல வழக்கறிஞர் ஏ.ஜி.நூரானி' அவர்கள் இப்பிரச்சினையின் பின்னணி குறித்து பல அதிகார பூர்வமானத் தகவல்களைச் சேகரித்து எழுதிவருகிறார். அவற்றில் பலவும் இக்கட்டுரையில் அடங்கும்.

## கள்ளமற்ற உணர்வுகள்

நம் நாட்டில் வெவ்வேறு மதங்களின் வழிபாட்டுத் தலங்கள் ஒரே இடத்தில் அல்லது மிக அருகில் அமைந்திருப்பதை நாம் பல இடங்களில் காணலாம். இங்கு வெவ்வேறு மத வழிபாடுகள் அமைதியாக நடந்துவந்துள்ளன. கிருத்துவர்களும் இந்துக்களும் மண்டைக்காட்டில் குருசடி தேவ மாதாவையும் பகவதி அம்மனையும் மெழுகுவர்த்தியை ஏற்றி, கற்பூரத்தைக் கொளுத்தி நெஞ்சில் பேதமின்றி வணங்கவில்லையா? கள்ளமற்ற இந்த உணர்வுக்கு கொள்ளி வைத்தது மதவெறியர்கள்தானே?

இப்படி அக்கம்பக்கத்தில் அமைதியாக குடியிருந்தவர்கள்தான் அயோத்தியைச் சார்ந்தவர்கள். பாபர் மசூதியும் ராம ஜன்ம ஸ்தானமும் மசூதியின் வெளிவளாகத்தில் மசூதியிலிருந்து சுமார் 150 அடி தொலைவில், 'சபுத்ரா' (Chabutra) என்றழைக்கப்படும் மேடை (17' x 21' அளவில்) கட்டப்பட்டுள்ளது. மசூதியும் சபுத்ராவும் ஒரு வேலியால் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டிற்கும் பொதுவாக ஒரு வெளி வளாகம் உள்ளது. ராமர்



படிப்பகம்

www.padippakam.com

பிறந்த இடம் என்று மக்களால் நம்பப்படும் ராம ஜன்ம ஸ்தானத்தில்நான் சபுத்ரா எனப்படும் மேடை அமைக்கப்பட்டுள்ளது.

இம்மசூதியில் எந்த ஆண்டுவரை வழிபாடு நடந்தது, என்பது சர்ச்சைக்குரிய விஷயம். ஆனால், ஒரே வளாகத்தில் மசூதியும் ராம ஜன்ம ஸ்தானமும் நீண்டகாலமாக இருந்துவந்துள்ளன. மேலும், ஏற்கெனவே உள்ள இந்துமத நம்பிக்கையின்படி ராமர் பிறந்த இடம் மசூதியின் வெளியே (சபுத்ரா) உள்ளது; இப்போது மதவாத விஷமிகள் சொல்வதைப் போல், மசூதி கட்டப்பட்டுள்ள இடத்தில் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

மாயாஜாலம்

1949 டிசம்பர் 23 அன்று பாபர் மசூதி, ராமர் கோயிலாக மாறிய ''தெய்வீக மாயாஜாலம்'' ஒன்று நடந்தது.

இந்தியா, பாகிஸ்தான் என இந்திய துணைக் கண்டம் பிரிந்து, வகுப்புவாதத்தின் கொலைவெறியாட்டம் நடந்து, பழமைவாத அமைப்புகள் மதக்கலவரத் தூண்டுதல் வேலைகளில் ஈடுபட்டிருந்த சூழலில் மேற்கண்ட 'மாயாஜாலம்' நடந்தது.

அகில பாரதிய ராமாயண மஹாசபா என்னும் அமைப்பின் சார்பில் மசூதியின் வாயிலில் 9 நாள்கள் தொடர்ந்து நடத்தப்பட்ட ராமாயண உபன்யாசத்தின் உச்சகட்டமாய் நடந்த இம்மாயாஜால நிகழ்ச்சி ஆர்.எஸ்.எஸ். ஆதரவு பத்திரிகையான 'ஆர்கனைசர்'இல் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டது.

''வரலாற்று முக்கியத்துவம் பெற்ற 1949 டிசம்பர் 23 அன்று காலை ஸ்ரீராமச்சந்திரன், சீதாதேவி ஆகியோரின் சிலைகள் ஜன்ம ஸ்தானத்தில் மாயமாகத் தோன்றின.'' (ஆர்கனைசர் மார்ச் 29, 1987)

இந்த மாயம் எப்படி ஏற்பட்டது என்பதை ஃபைசாபாத் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் கே.கே. நாயர் என்பவர் உ.பி. முதலமைச்சருக்கு அனுப்பிய செய்தி அம்பலப்படுத்தியது. ''மசூதியில் ஒருவரும் இல்லாத நேரத்தில் சில இந்துக்கள் அங்கு புகுந்து சிலைகளை வைத்துவிட்டனர்...... இரவு காவல் துறையினர் 15 பேர் அங்கு இருந்தும், அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.''

அயோத்தி காவல் துறை எஸ்.ஐ. தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையின் (F.I.R.) அடிப்படையிலேயே மாஜிஸ்ட்ரேட் நாயரின் தகவல் அனுப்பப்பட்டது. F.I.R.ல் உள்ள சில முக்கிய தகவல்கள்—

மசூதியின் சுவர்களில் சீதாராம் என்று எழுதப்பட்டது; சிலை தோன்றிய செய்தியைக் கேட்டவுடன் சுமார் 5000 மக்கள் மசூதி வாயிலில் கூடி பஜனை செய்யத் தொடங்கினர். அவர்கள் உள்ளே நுழைய முடியாதபடி போலீசார் தடுத்துவிட்டனர்.

இந்தக் கட்டத்திலேயே பிரச்சினை மேலும் சூடுபிடிக்க அனுமதிக்கா



படிப்பகம்

www.padippakam.com

மல், சிலைகள் திடீரென்று தோன்றிய மர்மத்தை மக்களிடையே பகிரங்க மாக துகிலுரித்து, மக்கள் மசூதி வாயிலில் கூடாமல் இருக்க அரசு கண்டிப் பான நடவடிக்கைகள் எடுத்திருந்தால் இன்று ராம ஜன்மபூமி - பாபர் மசூதி பிரச்சினை விஸ்வரூபம் எடுத்திருக்காது. இதை அப்போதே எடுத்து ரைத்தவர்களில் காங்கிரஸ்காரர்களும் உண்டு. ஆனால் அவர்களுடைய குரல் எடுபடவில்லை.

இந்தப் பிரச்சினையை முளையிலேயே கிள்ளிவிடாமல் வளரவிட்ட தற்கு காரணமான சக்திகளில் ஃபைசாபாத் மாஜிஸ்ட்ரேட் நாயர் முக்கிய மானவர் என்று கூறப்படுகிறது. அன்றைய பிரதமர் நேருவிலிருந்து உ.பி. தலைமைச் செயலர் உள்பட சிலைகளை மசூதியிலிருந்து அகற்றிவிட வேண்டும் எனக் கருத்து தெரிவித்ததும், அப்படிச் செய்தால் அயோத்தி யில் கலவரம் ஏற்பட்டு பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும் என்ற வாதத்தின் அடிப்படையில் சிலைகளை நாயர் அகற்றவில்லை. பிற்காலத்தில் நாயர் தன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு ஜனசங்கம் கட்சியில் (இன்றைய பாரதீய ஜனதா கட்சி) சேர்ந்து விட்டார். இப்போது இவருடைய உருவப்ப டம் ஒன்று அயோத்தி கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

## மசூதிக்கு பூட்டு

1949 டிசம்பர் 29 அன்று இப்பிரச்சினையை ஒட்டி நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி—

★ மசூதி பூட்டப்படும்; கோர்ட்டு சார்பாக நியமிக்கப்பட்ட ஒருவர் அங்கு சட்டம் - ஒழுங்கு சீர்குலையாமல் பாதுகாப்பார்.

★ மசூதி வளாகத்தின் ஒதுக்குப்புற வாயில் மூலம் பக்தர்கள் சிலைக ளைத் தரிசித்து வழிபடலாம். (கட்டுப்பாடுகளுடன் வழிபாடு உரிமை) இதற்காக நான்கு பூசாரிகள் நியமிக்கப்படுவர்.

மசூதி வளாகத்திற்குள் தோன்றிய சிலைகளை அப்புறப்படுத்தாமல் அங்கு தொடர்ந்து பூஜை நடக்க வழி செய்த நீதிமன்றத் தீர்ப்பு, முஸ்லீம் சமூகத்தினருக்கு ஆத்திரமூட்டும் செயலாகவே அமைந்தது.

ஓராண்டுக்குப் பிறகு, 1950 ஜனவரி 16ல் மசூதியில் சிலை பூஜைக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தக் கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டாலும் சிலைகளை அப்புறப்ப டுத்த வேண்டும் என்ற மனுவை நீதிபதி ஏற்கவில்லை. இதற்கு அவர் அளித்த விளக்கம், ''மனுதாக்கல் செய்த அன்று சிலைகள் அங்கு இருந்தன என்பது சர்ச்சைக்கு அப்பாற்பட்ட உண்மை'' என்பதே. ஆனால், 1949 டிசம்பர் மாதத்திற்கு முன் சிலைகள் அங்கு இருந்தனவா என்ற கேள் வியோ அதற்கான பதிலோ தீர்ப்பில் இடம்பெறவில்லை.

இது நீதிபதியின் அப்பட்டமான மதச்சார்புடைய, பாரபட்சப் பார்வை யினையே பிரதிபலித்தது. ஏனெனில், உ.பி. மாநில அரசு சார்பாக கோர்ட் டில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டது:

''வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கும் இடமான பாபர் மசூதி என்பது



படிப்பகம்

www.padippakam.com

நீண்டகாலமாக முஸ்லீம்கள் தொழுகை செய்துவரும் மசூதியாகும். ஸ்ரீராமனின் கோயிலாக இது பயன்படுத்தப்படவில்லை... 1949 டிசம்பர் 22 அன்று ஸ்ரீராமனின் சிலைகள் அங்கு மறைமுகமாகவும், தவறாகவும் வைக்கப்பட்டன.''

இதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகள் சமீபகால வரலாறு இரு மதங்களைச் சார்ந்த தீவிரவாதிகள், மதத்துவேஷப் பிரச்சாரத்தில் இறங்கினர்.

1984 அக்டோபர் 7ல் பிறந்த ராம ஜன்மபூமி செயல்கமிட்டி 'தாலா கோலோ' (பூட்டைத் திற) என்னும் இயக்கத்தைத் துவக்கி, நாடெங்கும் ரத யாத்திரைகளை நடத்தி, கலவரங்களை மூட்டிவிட்டது. பாபர் மசூதி செயல்கமிட்டி, முஸ்லீம்கள் இந்தியக் குடியரசு தின விழாவில் கலந்து கொள்ள வேண்டாம் என வேண்டுகோள் விடுத்தது. இரு தரப்பினரும் நாடு தழுவிய கிளர்ச்சிக்குத் திட்டமிட்டனர்.

## கோர்ட்டு தீர்ப்பு

இத்தகைய பதற்றமான சூழலில் அளிக்கப்பட்ட செஷன்ஸ் கோர்ட்டின் தீர்ப்பு, பிரச்சினையை சிகரத்தின் உச்சிக்குத் தள்ளிற்று.

1986 ஜனவரி 31ல் மசூதி வளாகம் திறக்கப்பட வேண்டும் என்று கோர்ட்டில் தொடுக்கப்பட்ட வழக்கில் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் பாண்டே, விசாரணையைத் தொடக்கி, போலீசின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தபின், 40 நிமிஷங்களுக்குள் தீர்ப்பளித்துவிட்டார். மசூதி திறக்கப்பட வேண்டும் என்று இத்தீர்ப்பை விளக்கும் விதத்தில் அவர் கூறியதாவது:

''சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டப்படுவதற்கும், சிலைகளின் பாதுகாப்பிற்கும், மசூதி கதவைப் பூட்டி வைக்க வேண்டும் என்பது அவசியமில்லை. பூட்டி வைப்பது என்பது மனுதாரருக்கும் அவருடைய சமூகத்தினருக்கும் (இந்துக்கள்) தேவையற்ற எரிச்சலை மூட்டும் ஒரு விஷயமாகும்.''

இத்தீர்ப்பின் மற்றொரு வாசகம்:

''கடந்த 35 ஆண்டுகளாக இந்துக்கள் இங்கு சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வழிபட்டுவருகிறார்கள். ஆகவே இம்மசூதியின் கதவு திறக்கப்பட்டால், ஆகாயம் கீழே விழுந்துவிடாது. சர்ச்சைக்குரிய இடத்தில் முஸ்லீம்கள் வழிபாடு செய்யவோ அவ்விடத்திற்குப் போகவோ அனுமதிக்கப்படுவதில்லை என்றும் மாவட்ட மாஜிஸ்டிரேட் என் முன் கூறியுள்ளார்.''

மசூதியிலிருந்து சிலைகள் அகற்றப்பட்டு மசூதி வக்ஃப் போர்டிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற முஸ்லீம்களின் வாதத்தை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல், சிலைகளின் பாதுகாப்பு இந்துக்களின் உணர்வு என்ற ரீதியிலேயே பிரச்சினையை அணுகி அளிக்கப்பட்ட தீர்ப்பு முஸ்லீம்களுக்கு ஆத்திரமூட்டி, முஸ்லீம் பழைமைவாதிகளுடைய கிளர்ச்சித் திட்டங்களைத் தீவிரப்படுத்த உதவியது.

இப்போது பாபர் மசூதியில் பாண்டேவின் உருவப்படமும் வைக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டுள்ளது!

எல்லாவற்றிற்கும் மேலாக, மசூதி வளாகக் கதவு திறக்கப்பட்டு, சிலைகளுக்கு பூஜை நடப்பது டி.வி.யில் காட்டப்பட்டது. முஸ்லீம் மக்க ளுக்கு எதிரான திட்டமிட்ட சதியாகவே இது தோன்றியது.

1986-ம் ஆண்டு சிவராத்திரிக்குள், பக்தர்களுக்கு மசூதி கதவுகள் திறக்கப்படும் என அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி விஸ்வ இந்து பரிஷத் தலைவர்களுக்கு உறுதியளித்ததாகவும், இந்துக்களுக்கு அளிக்கப்பட்ட இந்தச் சலுகையின் முழுப்பயனையும் காங்கிரஸ் கட்சி அடைவதற்காக டி.வி. ஒளிபரப்பு ஏற்பாடு செய்யப்பட்டது என்பதும் பத்திரிகைத் தகவல் கள்.

நாற்பதாண்டுகளுக்கு முன் பாபர் மசூதியில் இந்து சாமி சிலைகள் வைக்கப்பட்ட போது, அரசு கறாரான நடவடிக்கைகள் எடுக்காததைக் கண்டித்ததோடல்லாமல் எச்சரிக்கையும் செய்தார் அன்றைய ஃபைசாபாத் மாவட்ட காங்கிரஸ் செயலாளர், அக்ஷய பிரம்மச்சாரி என்பவர்.

விஸ்வ இந்து பரிஷத்தின் திட்டப்படி, 'விடுவிக்கப்பட வேண்டியது' ராம ஜன்மபூமி மட்டுமல்ல; மதுராவில் கிருஷ்ணன் பிறந்த இடம் என்று அவர்கள் கூறுமிடமும் இன்னும் நாடெங்கும் பல நூறு கோயில்களுமா கும். 1986ல், 12 வரலாற்று ஆசிரியர்கள் டைம்ஸ் ஆஃப் இந்தியாவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது போல், ''வழிபாட்டுத் தலங்களை விடு விக்க நாம் எதுவரை பின்னோக்கிச் செல்லலாம்? இந்துக்களால் அழிக்கப் பட்ட புத்த, சமண மதச் சின்னங்களை மீட்பது வரையா? அல்லது இந்துக்களுக்கு முன்பிருந்தவர்களின் ஆவி வழிபாட்டுச் சின்னங்கள் வரையா?''

நெல்லை மாவட்டத்தில் சமணர்களால் கட்டப்பட்ட குகைக் கோயில்கள் ஏழாம் நூற்றாண்டில் சிவன் கோயில்களாக மாற்றப்பட்டன. ஞானசம்பந்தர், பாண்டிய மன்னனை சைவ மதத்திற்கு மாற்றியபின் 8000 சமணர்கள், மன்னனால் கழுவில் ஏற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மேற்கண்டவைக்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு. சமண சமயத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு வஞ்சம் தீர்ப்போம், சமணக் கோயில் களை மீட்போம், என இப்போது சமண மதத்தினர் கிளர்ச்சி செய்யத் துவங்கினால், விஸ்வ இந்து பரிஷத் வாதத்தின்படி அது நியாயம்தானே!

மத வழிபாட்டுத் தலங்களை மீட்கும் இயக்கத்தை இருதரப்பு மத வெறி அமைப்புகளும் துவக்க அனுமதித்துவிட்டால் நாடே ரத்த வெள்ளத் தில் மூழ்கிச் சீரழியும். இத்தகைய அபாயத்தை தவிர்ப்பதற்காகத்தான் பாபர் மசூதியை தேசிய சின்னமாக்க வேண்டும் என்ற ஆலோசனையை வரலாற்று ஆசிரியர்களும், மதச்சார்பற்ற ஜனநாயகவாதிகளும் முன்வைத் துள்ளனர். இதை அனைத்து மக்களும் ஏற்கும்படியான பிரச்சார இயக்கம் நடத்த வேண்டியுள்ளது.

''மசூதியையோ, முஸ்லீம்களையோ காப்பாற்றும் பிரச்சினையாக இதை நான் பார்க்கவில்லை. காங்கிரஸ் கட்சி, மகாத்மா காந்தி ஆகியோ ரின் எந்த உயரிய லட்சியங்களுக்காக நாம் இதுவரை போராடிவருகி



படிப்பகம்

www.padippakam.com

றோமோ அவற்றைக் காப்பாற்றும் பிரச்சினையாகவே நான் இதைப் பார்க்கிறேன். (மதவாத) பிற்போக்கு சக்திகளை நமது பலம் அனைத்தையும் திரட்டி எதிர்க்கவில்லையென்றால், காங்கிரசின் லட்சியங்கள் அழிந்துவிடும்; பிற்போக்குச் சக்திகளே நாடெங்கும் மேலோங்கி நிற்கும்'' என்று அக்ஷய பிரம்மச்சாரி, மத்திய உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரிக்கு அனுப்பிய மனுவில் குறிப்பிட்டார்.

பிரம்மச்சாரி போன்றவர்களின் உணர்வுகளை உதாசினப்படுத்தி, தேர்தல் ஆதாயத்தை மட்டும் கருதி காங்கிரஸ் தலைவர்கள் ஆட்சி செய்து வந்ததன் விளைவுதான் இன்று வகுப்புவாத சக்தியின் வலுவடைந்து வரும் போக்கு.

○

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்